**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C. C. No. 334/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W. 1 |
| Name | : | கலையரசன் |
| Father's /Husband Name | : | சின்னகுஞ்சு |
| Village | : | மூலமங்களம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 47 |
| Occupation | : | விவசயாம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 26th day of May 2026. A1 present. A2 died.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசயாம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார். 2 ம் எதிரி இறந்துவிட்டார். கடந்த சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் சரியாக நினைவில்லை. ஒரு நாள் நானும் உஷா என்பவரும் உஷாவின் வீட்டிலிருந்தபோது அவரது வீட்டு வாசலில் அடையாளம் தெரியாத 3 நபர்கள் சத்தம் போட்டு தகராறு செய்து கொண்டிருந்தார்கள். நான் என்னவென்று பார்க்க சென்ற போது அந்த கூட்டத்திலிருந்த நபர்களில் யாரோ ஒருவர் என்னை அடித்தார் அதில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அதை தடுக்க வந்து உஷா என்பவரையும் அவர்கள் தாக்கினார்கள். அதில் அவருக்கும் உள்காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எங்களை எனது மனைவி ரஷ்யா இருசக்கர வாகனம் மூலம் குடவாசல் மருத்துவமனையில் முதலுதவிக்காக அழைத்து சென்று அங்கிருந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எங்களை சிகிச்சைக்காக சேர்த்தார். நாங்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் எங்களை விசாரித்த போது நான் நடந்த சம்பவத்தை சொல்லி, காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வாய்மொழியாக சொன்னோம். போலிசார் என்னிடம் ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில்

காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்த போது மேற்கூறிய சங்கதிகளை நான் சொன்னேன்.

**அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 பிரிவின் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் வழக்கு கோப்பின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும், உஷாவும் மற்றும் 1ம் எதிரியும் தற்போது சமாதானம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். 1ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். சமாதான மனுவில் நிகழ்நிலை புகார்தாரர் என்ற இடத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 30.09.2020 மாலை சுமார் 05.00 மணியளவில் எனது உறவினரின் துக்க நிகழ்ச்சியில் நானும் எனது மனைவியும் கலந்துகொண்டு எனது மச்சான் ரமேஷ் வீட்டுக்கு செல்லும் போது அவரது மனைவி உஷாவிற்கும் பக்கத்து வீட்டில் வசிக்கும் 1ம் எதிரிக்கும் வாய்தகராறு நடந்துகொண்டிருந்தது என்றும் நான் ஏன் சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டேன் என்றும் அப்போது இறந்துபோன 2ம் எதிரி கீழே கிடந்த செங்கல்லை எடுத்து என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டிகொண்டே அடித்தார் என்றும், அதில் எனக்கு தலையில் பின்பக்கம் காயம் ஏற்பட்டது என்றும், 1ம் எதிரி கையால் அடித்தார் என்றும், இதை தடுக்க வந்த உஷா என்பவரையும் 1ம் எதிரி கீழே தள்ளிவிட்டார் என்றும் அதில் உஷா என்பவர்க்கு நெஞ்சில் உள்காயம் ஏற்பட்டது என்றும் தெருவில் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் விலக்கிவிட வந்தபோது 1ம் எதிரி எங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார் என்றும் காயம்பட்ட எங்களை எனது மனைவி இருசக்கர வாகனம் மூலம் குடவாசல் அரசு மருத்துவமனைக்கு முதலுதவி செய்ய அழைத்துசென்றார் என்றும், அங்கிருந்து திருவாருர் அரசு மருத்தவக்கல்லூரி மருத்துமனையில் சேர்த்தார் என்றும் போலீசார் வாக்குமூலத்திலும் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் 1ம் எதிரியுடன் சமாதானம் செய்துக் கொண்டதால் ஆஜர் 1ம் எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை

**மறுவிசாரணை** இல்லை

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 21:36:30 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`